# வாழ்வில் நிச்சய வெற்றிக்கு இருபது வழிகள்-7

இப்படி நாம் ஒரு வியாபார, தொழிலதிபருக்கான மனப்பான்மைக்கு வரும் போது தான் நாம் சித்தபூர்வமாக CONSCIOUS ஆக இருக்க ஆரம்பிப்போம். அது வெறும் CONSCIOUS ஆக, வெறும் கவனமாக இல்லாமல், வேலையை விரும்பிச் செய்யும் ஆர்வமாக மாற வேண்டும். அது தான் முன்னேற்றத்திற்கான அடுத்த வழி.

ஒரு வேலையை விரும்பி செய்யும் போது தான் நம் முழு திறமையை வெளிப்படுத்த முடியும். அல்லது அதை விட ஒரு படி மேலே போய் கூட வெளிப்படுத்த முடியும். அதனால் ஆனந்தபட முடியும். ஆனந்தம் தான் இறைவனின் லீலைகளுக்கு நோக்கம் என்னும் போது, அவன் பிரதிநிதியான ஆன்மா வெளி வந்து அதன் சக்தி அல்லது இறை சக்தி, அல்லது பிரபஞ்ச சக்தி என்று எதை நம்பினாலும் சரி, அது வாழ்வில் வெளிப்பட அதுவே வழிவகுக்கும்.

நம் சக்திகளை விட, உயர் சக்திகள் செயல்படும் போது முன்னேற்றமும் பல மடங்கு இருக்கும் என்பது சொல்லாமலேயே புரிந்து கொள்ள முடியும். நாம் வாழ்வில், எத்தனை செயல்களை பிடித்து செய்கிறோம் என்று கவனித்துப் பார்ப்போம். பெரும்பாலும் உணவு, பாலுறவு போன்ற உடலின் தேவைகளை தவிர பெரும்பாலும் எதையும் நாம் பிடித்து செய்வதில்லை. அவற்றைக் கூட இறைவன் நம் பரிணாம வளர்ச்சிக்காக வைத்த ஒரு உந்துதல். அந்த உந்துதலின் தாக்கத்தை தாங்க முடியாது என்பதால், அது இல்லாமல் வாழ்வு கிடையாது என்ற உளவியல் காரணங்களால் தான் அதை செய்கிறோமே தவிர, MECHANICAL ஆக, பழக்கமாக, வழக்கமாக செய்கிறோமே தவிர பிடித்து தான், அனுபவித்து தான், ஆனந்தத்திற்கு தான் செய்கிறோமா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

ஆபீஸ் வேலையானாலும், பள்ளிப் படிப்பானாலும், வீட்டு வேலையானாலும், நாம் அதைக் கடனே எனச் செய்கிறோம். விரும்பிச் செய்வதில்லை. நாம் விரும்பிச் செய்வது பொழுதுபோக்கு என்று நாம் நினைப்பவற்றை மட்டுமே. அவற்றால் பெரும் பலன் பெரும்பாலும் வருவதில்லை. பள்ளியில் முதல் ராங்க் வாங்குபவன், ஆபீசில் சீக்கிரம் பிரமோஷன் பெறுபவர், குடும்பத்தை விரைவாக முன்னேற்றுபவர்களைப் பார்த்தால், படிப்பையும், பைலையும், வீட்டு வேலைகளையும் விரும்பிச் செய்பவர்களாக இருப்பார்கள். அத்துடன் படிப்பு அவருக்கு இன்பம் தரும். எல்லோரும் T.V. பார்க்கும்பொழுது அப்படிப்பட்டவர் ஆபீஸ் பைல் பார்த்துக்கொண்டிருப்பார். ரசமான ஊர் கதையை, வதந்தியை நாலுபேர் ருசியாக பேசுவதை கேட்பதில் பங்கு

கொள்ளாமல், அவர்களுக்குரிய சமையலைச் செய்வதில் இன்பம் காணும் பெண்கள். அனைவருக்கும் சலிப்பாக இருக்கும் காரியத்தை விரும்பி செய்து இன்பம் தேடுவது சாதனையாளர் மனநிலை.

தெரிந்த தவற்றை வேண்டும் என்றே விரும்பி செய்வதால் செய்ததால்தான் பிரச்சினை வருகிறது எனபது அனைவருக்கும் தெரியும். அதே போல தெரிந்த நல்லதை   விரும்பி செய்தால் முன்னேற்றம் வரும் என்பதை நாம் கவனிப்பதில்லை.

உதாரணமாக அதிக பணம் சம்பாதிப்பதில் நமக்கு விருப்பம் இருக்கிறது. ஆனால் அது சம்பாதிப்பட்டவற்றை நாம் விரும்பித்தான் செய்கிறோமா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். அதன் காரணம் என்ன?

நமக்கு நல்ல திறமை இருப்பதால், நிறைய சம்பாதிக்க நினைத்தால், பணத்தைச் சம்பாதிப்பது என்றால் தவறு செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது. அதுவே சமுதாய முறை என்று நினைக்கிறோம். பலர் வாழ்க்கையைச் சோதித்து, கேட்டவற்றை ஆராய்ந்து, தவறில்லாமலும் சம்பாதிக்கலாம் என்று முடிவுக்கு வந்தால், பணத்தின்மீது ஆசை வருவது தவறல்லவா என்ற எண்ணம் தோன்றுகின்றது. முதல் நிலையைத் தாண்டி வந்தபின், இந்நிலையில் குழப்பம் ஏற்பட்டு, இந்த ஆசை வேண்டாம் என்று முடிவு செய்கிறோம். அப்போது அது விரும்பி செய்வதில் இருந்து இருந்து கடமைக்காக செய்வதாக மாறி விடுகிறது. பின் ஜீவனற்ற பழக்கமாக மாறி விடுகிறது. இது தெளிவின்மை. அது போல அநீதியும் அறைந்தால் , நம் திறமைக்குறைவு அதனால் அந்த திறமைக்கு  உட்பட்ட வேலையை மட்டுமே செய்தல், சுபாவக்குறைவு  ( TEMPERMENTAL NATURE ) என்று பல காரணங்களால் நாம் செய்வதை  விருப்பி செய்வதில்லை. நாம் விரும்பி செய்யும் விஷயங்களை இதனுடன் ஒப்பிட்டு பார்த்தல் இது புரியும்.

நாம் செய்யும் எந்த செயலை எடுத்து கொண்டாலும் அதை விரும்பி செய்கிறோமா என்றால் இல்லை என்றே தெரியும்.   அனைத்தையும் சமுதாயத்திற்காக,  உறவுக்காக,  வேலைக்காக,  கடமைக்காக, வருமானத்திற்காக,  வேறு என்ன செய்வது என்ற நிலையில் செய்து கொண்டு இருப்போம்.  நடைமுறை அப்படி இருந்தாலும் CONSCIOUS  ஆக ஒன்றை பிடித்த மாதிரி மாற்றி செய்தாலோ,  அல்லது செய்வதையெல்லாம் விரும்ப ஆரம்பித்தாலும்,  அந்த செயல்,  மனநிலை,  உயர்வடைவதை  உடனடியாக காண முடியும்.   வழக்கத்தை விட RELATIONSHIP, PRODUCTIVITY, CREATIVITY - உயர்வதைப் பார்க்க முடியும்.   நம் திறமை,  செயல்பாடு,  அனைத்தும் அடுத்த உயர்ந்த நிலையில் வெளிப்படுவதை,  பலனளிப்பதை பார்க்க முடியும்.

அது ஒரு செம்மையை நோக்கிய, PERFECTION ஐ நோக்கிய ஒரு பயணமாக இருக்கும். செயலில், மனப்பான்மையில், நடத்தையில், அறிவில் செம்மை அடைவதற்கான பயணமாக இருக்கும். PERFECTION ஐ யார் தான் விரும்ப மாட்டார்கள். அப்போது உங்களைச் சுற்றி உள்ளவர்களின் பார்வை உங்களை நோக்கி திரும்பும். ஒரு சிலர் நம்மை திரும்பிப் பார்க்கிறார்கள் என்றாலே, அல்லது பிறர் கவனம், சிந்தனை நம்மில் படுகிறது என்றாலே நாம் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்று பொருள். அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நாம் ஒருநாள் நிச்சயம் வருவோம் என்பதற்கான அடையாளம் அது.

2009 இல் ஒரு கோடி TURN OVER ஆக என் கம்பெனி இருந்த போது, 9 கோடிக்கான ஆர்டர் ஒன்றை செய்கிறீர்களா என்று ஒரு பெரிய கம்பெனி கேட்டது. அது என் தகுதி, திறமைக்கு மீறிய ஒன்று என்று அப்போது நினைத்ததால், அதை முடியாது என்று விட்டுவிட்டேன். அது ஒரு விதமான முட்டாள்தனம் என்றாலும், ஒரு சின்ன கம்பெனிக்கு யாரும் ஒன்பது கோடி ஆர்டர் தரப்போவதில்லை. அப்படி வருகிறது என்றால் நம் உழைப்பை, செயலை, திறமையை, செம்மையை யாரோ கவனத்திருக்கிறார்கள் என்று புரிகிறது. பல ஆண்டுகள் அடுத்து 2018 இல் அந்த TURN OVER வந்தது. அது செய்யும் செயலை விரும்பி செய்ததால் வந்தது.

அப்படி நாம் எல்லாவற்றையும் விரும்பி தான் செய்கிறோமா என்று எப்படி தெரிந்து கொள்வது? நம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக் கொள்வோம். இப்போது நீங்கள், உங்களுக்கு தேவையான அளவு சம்பாதித்து விட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அல்லது உங்களுக்கு தேவையான அனைத்தையும் யாரோ கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் செய்து கொண்டு இருக்கும் இதே வேலையை செய்வீர்களா என்று கேட்டால், பெரும்பாலோரின் பதில் - விட்டால் போதும் ஓடி விடுவேன் என்றே இருக்கும். ஆனால் TATA, AMBANI, BILL GATES, STEVE JOBS, ELAN MUSK என்று பெரும் சாதனையாளர்கள் சொன்னது, சொல்வது என்னவென்றால் - எதுவும் இல்லை என்றாலும் இதை செய்து கொண்டு இருப்போம் என்பது தான். அந்த அளவிற்கு ஒவ்வொன்றையும் விரும்பி செய்கிறார்கள் சாதனையாளர்கள். அதுவும் STEVE JOBS இன் சுயசரிதையை படித்தால், ஒவ்வொரு பொருளை தயாரித்து வெளியிடுவதற்கு முன் அதை பார்வையிடும் போது அவருக்கு பிடித்த மாதிரி இல்லை என்றால் எத்தனை கோடி நஷ்டம் என்றாலும் அதை தூக்கிப் போடும் வழக்கம் அவரிடம் இருப்பதை காண முடியும். அதனால் தான் APPLE கடந்த இருபது வருடமாக MOST VALUED COMPANY ஆக NUMBER ONE ஸ்தானத்திலேயே இருக்கிறது. காரணம் ஒரு செயலை விரும்பிச் செய்வது என்பது ஒரு முழுமை. ஜடமே என்று, ஜீவன் இல்லாமல், உடல் பழக்கத்தால் , வழக்கத்தால் செய்வதில் சற்று ஆர்வம், நோக்கம் என்று ஏதோ ஒன்று வெளிப்படும் போது உணர்வு vital

அதில் சேர்க்கிறது.  அந்தச் சித்தத்தை, CONSCIOUSNESS  தருவது அறிவு. இதற்கான ஆனந்தத்தை,  அதன் சட்டங்களை புரிய வைத்தது இறைவனின் ஞானம்.

உடல்,  உணர்வு,  அறிவு,  ஞானம் என்று எல்லாம் ஒரே இடத்தில் வெளிப்படுவது ஒரு முழுமை என்பதால்,  அதன் அடுத்த கட்ட புதுமை ஒன்று உருவாகிறது.  அது முழுமை என்பதாலேயே, SATURATING A LEVEL OR PLANE என்பதாலேயே அது அதே இடத்தில் இருக்க முடியாது.  அது அடுத்த கட்டத்திற்கு சென்று தான் ஆக வேண்டும்.  அது தான் வாழ்வின் வழி.  அது வேலையில் இருப்பவர்களுக்கு PROMOTION  அல்லது அதிக வருமானம் தரும் புது வேலை என்று ஆரம்பித்து,  வியாபாரி,  தொழிலதிபர் என்று எதுவாக வேண்டுமானாலும் மாறும் வாய்ப்பை அளிக்கிறது.

இறைவனுக்காக செய்வதை சமர்ப்பணம் என்கிறோம்.  இது நமக்காக,  நம் முன்னேற்றத்திற்காக நாமே செய்வது என்பதால் நமக்கு நாமே அர்ப்பணம் செய்து கொள்கிறோம் என்று பொருள்.  யாருக்கோ நாம் நம்மை அர்ப்பணம் செய்வதைவிட,  நமக்கு, நம் ஆனந்தத்திற்கு,  நம் முன்னேற்றத்திற்கு, அர்ப்பணம் செய்வது நல்லது.  அது முன்னேற்றத்திற்கானது.  வாழ்வில், சித்தத்தில் -  முன்னேற்றத்திற்கானது என்பதால் நம் ஆன்மா விரும்பும் செயல் அது.  சித்தத்தில் உயர்வது என்பது, பரிணாமத்தில் (EVOLUTION ) வளர்வது என்பது இறைவன் விரும்பும் லீலை.  ஆனந்தம் என்பதால் அதன் பின் வாழ்வில் நடப்பது அனைத்துமே ஆனந்தமாக இருக்கும்.

2007  இல் NOKIA  ஒரு பெரிய தொழிற்சாலை கட்டிக் கொண்டிருந்த போது நான் அப்போது supervisor  ஆக வேலை செய்து கொண்டிருந்த ஒரு கம்பெனி அதில் CONTRACT  எடுத்து இருந்தது.  அது பெரிய CONTRACT  என்றாலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் என் மேற்பார்வையில் இருந்த இடத்தில் அதிகபட்ச ஆர்வம்,  செம்மை, client க்கு சிறந்ததை தர வேண்டும் என்னும் மனப்பான்மை,  திறமை, அறிவை அதிகப்படுத்துவது என்று என்னால் முடிந்த அனைத்தையும் TOKEN ACT  என்னும் முறைப்படி முயன்றேன்.  அந்த வருடம் தான் நான் சம்பளமாக அதிகபட்சம் பெற்ற வருடம்.  அதோடு அதன் பிறகு நான் ஈடுபட்ட அதே தொழிலில் ஒரு  நிறுவனத்தை சொந்தமாக தொடங்கி இன்று வரை அந்த குறிப்பிட்ட TECHNOLOGY தான் என் முன்னேற்றத்திற்கு காரணமாக இருக்கிறது.  அதன் பிறகு வேறு சில தொழில்களை நான் தொடங்கினாலும் அந்த அளவு முன்னேற்றம் அவற்றில் வரவில்லை. காரணம் TOKEN ACT  இல் காட்டிய முழுமையை பிற இடங்களில் செயல்படுத்த கடினமாக இருந்தது.  கடைபிடித்தால், செய்வதை எதிர்பார்ப்பு இல்லாமல் விரும்பிச் செய்தால் பலன் நிச்சயம் உண்டு என்பதற்கு இதுவே அடையாளம்.

HINDU NEWS PAPER புரியவில்லை என்றாலும் விரும்பி படித்தது, என்னை இன்று ஆங்கில சொற்பொழிவுகள், கட்டுரைகள் எழுதும் அளவிற்கு மாற்றி இருக்கிறது. ஒரு IMPORTED PRODUCT சரியாக வேலை செய்யாதபோது, குறிப்பிட்ட பலனை தராத போது, மற்ற அனைவரும் அதை செய்ய தேவையில்லை என்று கைவிட்டபோது, நான் ஆர்வத்துடன் எடுத்து விரும்பிச் செய்தேன். ஏன் எதிர்பார்த்த பலன், result வரவில்லை என்று தேடினேன். அதை தயாரித்த GERMAN COMPANY ஐ போலவே சிந்திக்க ஆரம்பித்தேன். அப்போது தான் அதில் இருந்த ஒரு CHEMICAL FORMULA எனக்கு பிடிபட்டது. அதுவே இன்று என்னுடைய சொந்த BRAND ஐ தயாரிக்கும் அளவுக்கு கொண்டு வந்துள்ளது.

ஒரு சாதாரண விஷயத்தில் கூட விரும்பி செய்வது ஆனந்தத்தை தரும் என்பதை காண முடியும். சித்திரை மாத உச்சி வெயிலில் நம்மால் ஒரு நிமிடம் கூட நிற்க முடியாது. ஆனால் விரும்பி விளையாடும் சிறுவர்கள், வெயிலை சிறிது கூட உணராமல் ஓ வென்ற கூச்சலுடன், ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருப்பார்கள். விரும்பிய நாவலை அல்லது புத்தகத்தை படிக்கும் போது, சாப்பாடு தூக்கம் போன்றவை கூட தேவைப்படாத அளவு இருப்பதுண்டு.

அதனால் செய்வது அனைத்தையும் விரும்பிச் செய்ய வேண்டும். ஆர்வத்துடன் செய்ய வேண்டும். அதுவே நம்மை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வழி.